அரசாங்க நிருவாகச் சுற்றறிக்கை இல. 21/96

எனது இல: எக்ஸரியூ/31/6
அரசாங்க நிருவாக, உள்நாட்டலுவல்கள்,
பெருந்தோட்டக் கைத்தொழில், பாராளுமன்ற
அலுவல்கள் அமைச்சு,
சுதந்திர சதுக்கம், கொழும்பு. 7
1996.—08—12

அமைச்சுக்களின் செயலாளர்கள்,
திணைக்களத் தலைவர்கள் யாவருக்கும்.

தொழிற்சங்க நடவடிக்கைகளுக்காக 1000த்திற்கு குறைவாகவும் 500க்கு கூடுதலாகவும் அங்கத்தவர்கள் உள்ள தொழிற்சங்கங்களின் தலைமை உத்தியோகத்தர் ஒருவருக்கு மாதத்தில் இரண்டு நாட்கள் உத்தியோகபூர்வ விடுமுறை வழங்கல்.

---

1000 திற்குக் குறைந்த எனினும் 500க்கு கூடுதலான அங்கத்தவர்கள் உள்ள அரசினால் பதிவு செய்யப்பட்டுள்ள தொழிற்சங்கங்களின் நடவடிக்கைகளுக்காக அதன் தலைமை உத்தியோகத்தரொருவருக்கு மாதமொன்றில் இரண்டு நாட்கள் உத்தியோக பூர்வ விடுமுறை வழங்குவதை அரசு அனுமதித்துள்ளது.

02. அதன் பிரகாரம் தாபன விதிக்கோவையின் XXV ஆம் அத்தியாயத்தின் 42ஆம் பிரிவுக்குப் பதிலாக பின்வரும் பந்தி பதிலீடு செய்வதன் மூலம் திருத்தப்படுகிறது.

"உத்தியோகத்தரொருவர் விடுவிக்கப்படுவதானால் பல பிரிவுகளைச் சேர்ந்த அங்கத்தவர்கள் சங்கத்தில் அங்கத்துவம் வகிக்குமிடத்து குறைந்தபட்சம் 1000 பேர் அங்கத்தவர்களும் அவ்வாறு பல பிரிவுகளைச் சேர்ந்த அங்கத்தவர்கள் இல்லாமல் ஒரு நிறுவனத்தின் அல்லது சேவை நிலையத்தின் அங்கத்தவர்களாக வரையறுக்கப்பட்டிருக்குமிடத்து குறைந்தபட்சம் 1500 அங்கத்தவர்கள் சங்கத்தில் இருக்க வேண்டும். 3000 பேருக்கு மேற்பட்ட அங்கத்தவர்களைக் கொண்ட சங்கமொன்றின் நடவடிக்கைகளுக்காக முழுநேர கால அடிப்படையில் உத்தியோகத்தர்கள் இருவரை விடுவிக்க முடியும். அங்கத்தவர்களின் எண்ணிக்கை 1000 த்திற்குக் குறைந்த எனினும் 500க்குக் கூடிய அரசினால் பதிவு செய்யப்பட்டுள்ள தொழிற்சங்கங்களின் சங்க நடவடிக்கைகளின் பொருட்டு முழு நேரகால அடிப்படையில் உத்தியோகத்தர்கள் விடுவிக்கப்படாததுடன் அதன் தலைமை உத்தியோகத்தர் ஒருவருக்கு அத்தகைய நடவடிக்கைகளுக்காக மாதமொன்றில் ஆகக் கூடிய இரண்டு நாட்கள் உத்தியோக பூர்வ விடுமுறை வழங்க முடியும்.

ஒப்பம்: ஆர். எஸ். ஜயரத்ன.
செயலாளர்,
அரசாங்க நிருவாக, உள்நாட்டலுவல்கள்,
பெருந்தோட்டக் கைத்தொழில், பாராளுமன்ற
அலுவல்கள் அமைச்சு.